பொருளடக்கம்



குகைவாசிகள் கொள்கைப் பாதை 9

குகைவாசிகள் பதிப்பகப் பாதை 16

இப்னு பாஸ் ﷺ வாழ்க்கைக் குறிப்பு 23

முதல் பகுதி: கொள்கையில் நிகழும் பிழைகள் 27

1 அல்லாஹ் எங்கும் இருக்கிறான் எனக் கூறுதல் 29

அல்லாஹ் உயர்ந்துவிட்டதின் சான்றுகள் 30

2 அடக்கத்தலங்களை வணக்கத்தலங்களாக ஆக்குதல் 32

படைப்புகளைப் பரிந்துரைக்குமாறு பிரார்த்திப்பது மாபெரும் இணைவைப்பே 34

3 அல்லாஹ் அல்லாதோர்மீது சத்தியம் செய்தல் 37

4 அல்லாஹ்வுடன் இணைத்துச் சொல்லுதல் 39

5 தாயத்து தகடுகள் கட்டுதல் 40

இணைவைப்பற்ற வார்த்தைகளால் ஓதிப்பார்த்தல் இணைவைப்பல்ல 41

6 மவ்லிது மற்றும் மீலாது விழாக்கள் கொண்டாடுதல் 42

இரண்டாம் பகுதி: கொள்கைளில் ஏற்படும் குறைபாடுகளும் அவற்றிலிருந்து ஈடேற்றம் அடையும் வழிகளும் 45

1 இஸ்லாமியக் கொள்கையின் சிறப்பம்சங்கள் 47

அகீதா என்றால் என்ன? 47

இஸ்லாமிய ஏகத்துவம் – நபிமார்களின் ஒரே மார்க்கம் 48

எளிமை – நபியவர்களின் ஷரீஅத்துடைய தனித்தன்மை 49

இஸ்லாம் என்பதன் விளக்கம் 52

2 இஸ்லாமின் கொள்கைகளும் குறைபாடுகளின் வகைகளும் 55

கொள்கையில் நிகழும் குறைபாடுகள் இரண்டு வகை 55

3 முதல் வகை 57
கொள்கைக் குறைபாடுகள் நுழையும் நான்கு வழிகள் 57
முர்த்தத் – மதம் மாறியவன் குறித்த சட்டம் 57
சில வார்த்தைகளால் இஸ்லாமிலிருந்து வெளியேறுதல் 60
சில செயல்களால் இஸ்லாமிலிருந்து வெளியேறுதல் 61
சில கொள்கைகளால் இஸ்லாமிலிருந்து வெளியேறுதல் 63
சந்தேகங்களால் இஸ்லாமிலிருந்து வெளியேறுதல் 68
4 இரண்டாம் வகை 71
மார்க்கத்தைவிட்டு வெளியேற்றாத, ஈமானைப் பலவீனப்படுத்தக்கூடிய அம்சங்கள் 71
பித்அத்தான விசயங்கள் 72
மவ்லிது நிகழ்ச்சி 72
மறைவான ஞானம் அல்லாஹ்வுக்கே 74
தொற்று நோய், ஸஃபர் மாதம், சகுனம் குறித்த மூடநம்பிக்கைகள் 74
பராஅத், மிஅராஜ் இரவுகளின் பெயரால் பித்அத்கள் 78
மூன்றாம் பகுதி: கொள்கை சம்பந்தப்பட்ட முக்கிய பயனுள்ள விசயங்கள் 81
பயனுள்ள விசயம் – 1 83
நட்சத்திர, இராசி பலன், சோதிடம் இணைவைப்பே 83
உலக இயக்கத்தை நட்சத்திரங்கள் நிர்வகிக்கவில்லை 84
பயனுள்ள விசயம் – 2 88
அல்லாஹ்தான் நிர்வகிக்கின்றான்; ஐம்பூதங்கள் அல்ல 88
பயனுள்ள விசயம் – 3 90
காலங்களை அல்லாஹ்தான் இயக்குகிறான்; நட்சத்திரங்கள் அல்ல 90
பயனுள்ள விசயம் – 4 94
சூனியக்காரர்கள், குறிகாரர்கள், சோதிடக்காரர்கள், சகுனம் பார்த்தல் குறித்த எச்சரிக்கை 94
குறிகாரர்களை நம்புவது இறைநிராகரிப்பே 94
சூனியக்காரர்களுக்கான தண்டனை 98

சூனியக்காரர்களின் பித்தலாட்டங்கள் 100
சிகிச்சைக்காக சூனியக்காரர்களிடம் செல்லக் கூடாது 101
மார்க்கத்திற்கு உட்பட்டு ஓதிப்பார்க்கலாம் 101
அல்லாஹ்வின் நாட்டமின்றி சூனியம் பாதிக்காது 101
சகுனம் பார்ப்பதும் சிறு இணைவைப்பே 103
அல்லாஹ்வைச் சார்ந்திருப்பதில் இரண்டு அம்சங்கள் 104

பயனுள்ள விசயம் – 5 107

ஸுன்னா – நபிவழியின் முக்கியத்துவமும் அந்தஸ்தும் **107**

ஸுன்னாவை நிராகரிப்பது மாபெரும் வழிகேடு 107
ஸுன்னாவை நிராகரித்த வழிகெட்ட கூட்டங்கள் 108
ஸுன்னாவை ஏற்காமல் நபிக்குக் கீழ்ப்படிய சாத்தியமில்லை 110
ஹதீஸை மறுத்தவர் குர்ஆனை மறுத்தவர்தான் 114
ஸுன்னாதான் குர்ஆனை விளக்கும் 117
ஹதீஸ் நிராகரிப்பாளர்களுக்கு எதிராக ஸலஃபின் தொடர் நடவடிக்கைகள் 122
ஸுன்னாவுக்கு ஸலஃப் அளித்த முக்கியத்துவம் 124

நான்காம் பகுதி: குத்ப்கள், வதத்கள் என்போரிடம் பிரார்த்திப்பதும் அவர்களிடம் பாதுகாப்புக் கோருவதும் குறித்த தீர்ப்புகள் 131

பிரார்த்தனை வேறு; உயிருள்ளவர்களிடம் உதவி கோருதல் வேறு 134
வணக்கத்தில் இணைவைக்கக் கூடாது 135
நபிமார்களின் பணி அல்லாஹ்வின் வணக்கத்தின் பக்கம் அழைப்பதே 137
இக்கால இணைவைப்பாளர்கள் முற்காலத்தவர்களைவிட மிகவும் இழிவானவர்கள் 139
முற்கால இணைவைப்பாளர்களின் கொள்கையே இக்காலத்தவர்களுக்கும் 140
அல்லாஹ்வின் அனுமதியின்றிப் பரிந்துரை கிடையாது 146
சுயமாக உருவாக்கப்படும் ஸலவாத்துகள் 148

ஐந்தாம் பகுதி: வெறுக்கத்தக்க சில விசயங்கள் குறித்து பொதுவாக முக்கியமான அறிவுரை 155

மனசாட்சிக்குக் கட்டுப்படுவது 155

மறைவானதை அறிபவன் அல்லாஹ் மட்டுமே 162

உருவங்களை அல்லாஹ் பார்ப்பதில்லை 166

அல்லாஹ் அல்லாதவர்கள் பயனளிப்பார்கள்; இன்னல் ஏற்படுத்துவார்கள்; குணமளிப்பார்கள் என நம்புவது 168

குலப்பெருமை பேசி திருமண உறவுகளை விலக்கிக்கொள்ளுதல் 171

1

அல்லாஹ் எங்கும் இருக்கிறான் எனக் கூறுதல்

*

அல்லாஹ் எல்லா இடங்களிலும் இருக்கின்றான் என்று கூறுவதும், அவன் வானத்திற்கு மேல் உயர்ந்துவிட்டான், அர்ஷின்மீது உயர்ந்துவிட்டான் என்பதை மறுப்பதும் மார்க்கத்தில் இல்லாத விசயமாகும். தூயவன் அல்லாஹ் தனது வேதத்தில் கூறுகிறான்:

إِنَّ رَبَّكُمُ اللَّهُ الَّذِي خَلَقَ السَّمَاوَاتِ وَالْأَرْضَ فِي سِتَّةِ أَيَّامٍ ثُمَّ اسْتَوَى عَلَى الْعَرْشِ

‘நிச்சயமாக உங்கள் இறைவன் அல்லாஹ்தான். அவன் வானங்களையும் பூமியையும் ஆறு நாட்களில் படைத்தான். அவன் அர்ஷின்மீது உயர்ந்துவிட்டான். (குர்ஆன் 7:54)

இதனை அல்லாஹ் தனது மகத்தான வேதத்தில் ஏழு இடங்களில் குறிப்பிட்டுள்ளான். அவற்றில் ஒன்றுதான் இங்கு எடுத்துக் காட்டியுள்ள வசனமாகும். அல்லாஹ் அர்ஷின்மீது உயர்ந்துவிட்டான் என்பது தொடர்பாக இமாம் மாலிக்[1] ﵀ அவர்களிடம் விளக்கம் கேட்கப்பட்டது. அவர்கள் கூறினார்கள்:

الِاسْتِوَاءُ مَعْلُومٌ، وَالْكَيْفُ مَجْهُولٌ وَالْإِيمَان بِهِ وَاجِبٌ

‘அல்இஸ்திவா’ என்பதற்கு உயர்ந்துவிடுதல் என்று பொருள் விளங்குகிறது. ஆனால், அதன் அமைப்பு விளங்கவில்லை. எனவே, அதை அப்படியே நம்புவதுதான் கடமையாகும்.’

---

1 இமாம் மாலிக் இப்னு அனஸ் இப்னு மாலிக் இப்னு அபூஆமிர் ﵀, ஹிஜ்ரீ 94 (கி.பி. 717)இல் மதீனாவில் பிறந்தார்கள். முப்பாட்டனார் அபூஆமிர் ﵁ மூத்த நபித்தோழர். இமாமவர்கள் மதீனா அறிஞர்களான இப்னு ஷிஹாப் அஸ்ஸுஹ்ரீ, அப்துல்லாஹ் இப்னு உமர் ﵄ அவர்களால் விடுவிக்கப்பட்ட அடிமை நாஃபிஃ ﵀ ஆகியோரிடம் ஹதீஸ்களைக் கற்றார்கள். இவர்கள் தொகுத்த ‘முவத்தா’ எனும் ஹதீஸ் தொகுப்பு மிகவும் பிரசித்தி பெற்றது. இமாம் ஷாஃபிஈ ﵀ இவர்களின் மாணவர். ஹிஜ்ரீ 179 ரபீஉல் அவ்வல் 14இல் தம் 85ஆம் வயதில் மதீனாவில் மரணித்தார்கள்.

2

அடக்கத்தலங்களை வணக்கத்தலங்களாக ஆக்குதல்

*

மார்க்கத்தில் இல்லாத விசயங்களில் அடுத்தது, அடக்கத்தலங்களை (கப்றுகளை) வழிபாடு இடமாக அமைத்துக்கொள்வதும், அங்கு தொழுவதும், அடக்கத்தலங்கள் மேல் (கட்டடங்கள்) குப்பாக்கள் அமைப்பதுமாகும். இவை யாவும் இணைவைக்கும் செயல் களுக்குக் காரணியாக அமைகின்றன. இதனால்தான் நபி ﷺ அவர்கள் யூதர்களையும் கிறித்தவர்களையும் சபித்து எச்சரித்துப் பின்வருமாறு கூறினார்கள். ஆயிஷா ؓ அவர்கள் கூறியதாவது:

لَعَنَ اللهُ الْيَهُودَ وَالنَّصَارَى، اتَّخَذُوا قُبُورَ أَنْبِيَائِهِمْ مَسَاجِدَ

யூதர்களையும் கிறித்தவர்களையும் அல்லாஹ் தனது கருணை யிலிருந்து அப்புறப்படுத்துவானாக. அவர்கள் தங்களின் நபிமார் களின் அடக்கத்தலங்களை வணக்கத்தலங்களாக ஆக்கிவிட்டார் கள் என்று நபி ﷺ அவர்கள் கூறினார்கள். (ஸஹீஹில் புகாரீ 1330, முஸ்லிம் 529)

أَلَا وَإِنَّ مَنْ كَانَ قَبْلَكُمْ كَانُوا يَتَّخِذُونَ قُبُورَ أَنْبِيَائِهِمْ وَصَالِحِيهِمْ مَسَاجِدَ، أَلَا فَلَا تَتَّخِذُوا الْقُبُورَ مَسَاجِدَ، إِنِّي أَنْهَاكُمْ عَنْ ذَلِكَ

அறிந்துகொள்ளுங்கள்: உங்களுக்கு முன்னிருந்த சமுதாயத் தவர்கள் தங்களுடைய நபிமார்கள் மற்றும் சான்றோர்களின் அடக்கத்தலங்களை வழிபாட்டுத் தலங்களாக ஆக்கிக்கொண்டார் கள். எச்சரிக்கை! நீங்கள் அடக்கத்தலங்களை வழிபாட்டுத் தலங்களாக ஆக்கிவிடாதீர்கள். அவ்வாறு செய்ய வேண்டாம் என்று உங்களுக்கு நான் தடைவிதிக்கிறேன். (அறிவிப்பு: ஜுன்துப் இப்னு அப்துல்லாஹ் ؓ, முஸ்லிம் 532)

ஜாபிர் இப்னு அப்தில்லாஹ் ؓ கூறியதாவது:

1

இஸ்லாமியக் கொள்கையின் சிறப்பம்சங்கள்

*

அகீதா என்றால் என்ன?

கொள்கை (அகீதா) என்பது மனிதன் எதை மனதில் உறுதிகொண்டு, மார்க்கமாகக் கருதுகின்றானோ அதுவே. நல்லதோ கெட்டதோ, தெளிவானதோ குழப்பமானதோ எதுவும் அதில் அமையலாம். இங்கு அகீதா என்பதன் நோக்கம் நல்ல கொள்கையைக் கூறுவ தாகும். அதன் மூலம் மனிதன் தனக்குக் கடமையானதைப் பற்றிப் பிடித்துக்கொள்ள வேண்டும்.

ஏனெனில், இவ்வுலகில் ஏராளமான கொள்கைகள் உள்ளன. அவை யாவும் வீணான கொள்கைகளாகும். எனினும், அல்லாஹ்வின் வேதமும் அல்லாஹ்வின் தூதருடைய வழிமுறைப்படியும் வந்த கொள்கைகளே தெளிவான கொள்கைகளாகும். அவை, இணைவைப்புச் செயல்கள், மார்க்கத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட பித்அத்தான செயல்கள் மற்றும் பாவகரமானச் செயல்கள் ஆகிய கலப்புகளிலிருந்து தூய்மைப்படுத்தப்பட்ட கொள்கைகளாகும். அந்தக் கொள்கைகளே இஸ்லாமியக் கொள்கைகளாகும். அந்தக் கொள்கைகளுக்குப் பெயரே இஸ்லாமாகும். அல்லாஹ் கூறுகிறான்:

إِنَّ الدِّينَ عِنْدَ اللَّهِ الْإِسْلَامُ

அல்லாஹ்விடம் அங்கீகரிக்கப்பட்ட மார்க்கம் இஸ்லாம்தான். *(குர்ஆன் 3:19)*

اَلْيَوْمَ أَكْمَلْتُ لَكُمْ دِينَكُمْ وَأَتْمَمْتُ عَلَيْكُمْ نِعْمَتِي وَرَضِيتُ لَكُمُ الْإِسْلَامَ دِينًا

இன்று உங்களுக்கு உங்கள் மார்க்கத்தை நிறைவு செய்து, உங்களுக்கு எனது அருளை முழுமைப்படுத்திவிட்டேன். உங்களுக்கு இஸ்லாம் மார்க்கத்தை அங்கீகரித்துக்கொண்டேன். *(குர்ஆன் 5:3)*

எனவே, இஸ்லாம்தான் அல்லாஹ்வின் மார்க்கமாகும். இஸ்லாமைத் தவிர வேறு எந்த மார்க்கத்தையும் எவரிடமிருந்தும் ஏற்கப்பட மாட்டா. இதற்குச் சான்றாக அல்லாஹ் கூறுகின்றான்:

وَمَنْ يَبْتَغِ غَيْرَ الْإِسْلَامِ دِينًا فَلَنْ يُقْبَلَ مِنْهُ وَهُوَ فِي الْآخِرَةِ مِنَ الْخَاسِرِينَ

இஸ்லாமைத் தவிர்த்து வேறு மார்க்கத்தை விரும்பினால் அப் பொழுது அவரிடமிருந்து அது ஏற்கப்படவேமாட்டாது. மேலும், அவர் மறுமையில் நஷ்டவாளியாகவே இருப்பார். (குர்ஆன் 3:85)

இஸ்லாமிய ஏகத்துவம் – நபிமார்களின் ஒரே மார்க்கம்

இஸ்லாம்தான் நபிமார்கள் அனைவரின் மார்க்கமாகும். நமது ஆதித் தந்தை ஆதம் ﷺ அவர்களின் மார்க்கமும், அவர்களுக்குப் பின்னர் வந்த நூஹ், இப்றாஹீம், மூஸா, ஈசா, தாவூது, சுலைமான், இஸ் ஹாக், யஅகூப், யூசுஃப் ﷺ ஆகிய நபிமார்கள் மற்றும் ஏனைய நபிமார்கள் ஆகியோரின் மார்க்கமும் கூட. இந்த மார்க்கமே பொதுவாக மக்கள் அனைவருக்கும் அல்லாஹ் அனுப்பிய முஹம் மது ﷺ அவர்களின் மார்க்கமும் ஆகும். அதனால்தான் நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

الْأَنْبِيَاءُ إِخْوَةٌ لِعَلَّاتٍ أُمَّهَاتُهُمْ شَتَّى وَدِينُهُمْ وَاحِدٌ

இறைத்தூதர்கள் ஒரே தந்தையின் பிள்ளைகள் ஆவார்கள். அவர்களின் தாய்மார்கள் பலராவார்கள். அவர்கள் மார்க்கம் ஒன்றே. (அறிவிப்பு: அபூ ஹுரைரா ﷺ, ஸஹீஹுல் புகாரீ 3443)

மற்றோர் அறிவிப்பில் பின்வரும் வார்த்தைகள் காணப்படுகின்றன:

أَوْلَادُ عَلَّاتٍ

'இறைத்தூதர்கள் தந்தைவழிச் சகோதரர்கள்.' (புகாரீ 3442)

இந்த நபிமொழியின் கருத்து யாதெனில், நபிமார்களின் மார்க்கம் (கொள்கை) ஒன்றுதான். அதுதான் அல்லாஹ் ஒருவனை மட்டுமே வழிபடுவது; அவனே அகிலங்களின் அதிபதி; அவனே சிறந்த படைப்பாளன்; நன்கு அறிந்தவன்; வழிபாட்டுக்குத் தகுதியானவன்; அவனைத் தவிர வேறு எவருமில்லை.

மேலும் மறுமைநாள், உயிர்ப்பித்து எழுப்புதல், சொர்க்கம் நரகம், நன்மை தீமை எடைபோடும் தராசு, இன்ன பிற மறுமை விசயங்கள் ஆகியவற்றை நம்புவதுமாகும். இவை யாவும் நபிமார்கள் யாவ

4

இரண்டாம் வகை

மார்க்கத்தைவிட்டு வெளியேற்றாத, ஈமானைப் பலவீனப்படுத்தக்கூடிய அம்சங்கள்

*

இந்த வகையானது கொள்கையில் இறைமறுப்பு அளவிற்கு குறைபாட்டை உண்டாக்காது. எனினும், நம்பிக்கையை (ஈமானை) பலவீனப்படுத்தும்; அந்த நம்பிக்கையைக் குறைத்துவிடும். இவ்வகையை மேற்கொண்டோர் அல்லாஹ்வின் கோபத்திற்கும், நரகத்தில் வீழ்வதற்கும் காரணமாக ஆகிவிடுவார்கள். ஆனால், அவர் இறைமறுப்பாளராக ஆகமாட்டார்.

'விபசாரம் தடை செய்யப்பட்ட ஒன்று; அதற்கு அனுமதியில்லை' என்று ஒருவர் நம்பிக்கைகொண்டிருக்கின்றார். எனினும், அதனைச் செய்தால் பாவியாக ஆகிவிடுவேன் என்று அறிந்துகொண்டே விபசாரம் புரிந்துவிடுகிறார். இவர் இறைமறுப்பாளர் ஆகமாட்டார். மாறாக, பாவியாகிவிடுவார். எனினும், அவரது ஈமானில் குறைவு ஏற்பட்டுவிடும். இந்தப் பாவம் அவருடைய கொள்கையில் குறைபாட்டை உண்டாக்கும்; இறைமறுப்பை உண்டாக்காது. ஆனால், விபசாரம் அனுமதிக்கப்பட்டதுதான் என்று அவர் கருதினால் இவ்வாறு கருதுவதன் மூலம் இறமைறுப்பாளர் ஆகி விடுவார்.

இது போன்றே திருட்டு உள்ளிட்ட தடை செய்யப்பட்ட விசயங் கள் அனுமதிக்கப்பட்டதுதான் என்று அவர் கருதினால் இவ்வாறு கருதுவதன் மூலம் இறைமறுப்பாளராகிவிடுவார். காரணம், அல் லாஹ் தடை செய்ததை அனுமதித்ததாகக் கூறியதேயாகும்.

இது போன்றே புறம் பேசுதல், கோள் சொல்லல், பெற்றோருக்கு இம்சை புரிதல், வட்டி உட்கொள்ளல் போன்றவை யாவும்

கொள்கையில் குறைபாட்டையும், மார்க்கம் மற்றும் ஈமானில் பலவீனத்தையும் உண்டாக்கும்.

பித்அத்தான விசயங்கள்

இது போன்றதுதான் மார்க்கத்தில் இல்லாத, புதிதாக உருவாக்கப் பட்ட பித்அத் விசயங்களும். இவை கடுங்குற்றங்களாகும். மார்க்கத் தில் இல்லாத ஒன்றை மார்க்க விசயமாக உண்டாக்குவது ஈமானை பலவீனப்படுத்தும். இருப்பினும், அது இஸ்லாமைவிட்டு வெளி யேற்றும் அம்சமாக ஆகாது. அதில் இணைவைப்புச் செயல் காணப்பட்டால் இஸ்லாமைவிட்டு வெளியேற்றிவிடும்.

அதற்கு எடுத்துக்காட்டுகள் உள்ளன: மண்ணறைகள்மீது கட்டடங்கள் எழுப்புவது பித்அத் செயல் ஆகும். அதாவது, மண்ணறை அருகில் பள்ளிவாசல் அல்லது அதன்மீது குப்பா எழுப்புவது இது மார்க்கத்தில் குறைபாட்டையும், நம்பிக்கையில் பலவீனத்தையும் உருவாக்கும் பித்அத் செயலாகும். எனினும், அவன் அல்லாஹ்வுடன் இணைவைப்புச் செயல் மேற்கொள்வது கூடும் என்று கருதவில்லை. மேலும், இறந்தோரிடம் பிரார்த்திக்க வேண்டும்; பாதுகாப்புக் கோர வேண்டும்; அவர்களிடம் நேர்ச்சை செய்ய வேண்டும் என்பதற்காகப் பள்ளிவாசலுடன் அந்த மண் ணறையைச் சேர்த்துக் கட்டவில்லை.

மாறாக, அவன் இச்செயல் காரணமாக மண்ணறையில் அடங்கி யிருப்போருக்கு மதிப்பளிக்க வேண்டும் என்று (மட்டுமே) எண்ணினால் அப்போது இச்செயல் இறைமறுப்பாக ஆகாது. எனினும், மார்க்கத்தில் குறைபாட்டையும் ஈமானில் பலவீனத்தை யும் குறைவையும் உண்டாக்கும் பித்அத் செயலாகும். மேலும், இணைவைப்புச் செயலுக்குக் காரணியாக அமைந்துவிடும்.

மவ்லிது நிகழ்ச்சி

பித்அத்தான செயல்களுக்கு அடுத்து ஓர் எடுத்துக்காட்டு: மவ்லிது நிகழ்ச்சி நடத்துவது. மக்கள் சிலர் ரபீஉல் அவ்வல் மவ்லிது நிகழ்ச்சி நடத்துகிறார்கள். இந்தச் செயல் பித்அத் ஆகும். ஏனெனில், இதனை நபி ﷺ அவர்களோ, அவர்களின் தோழர்களோ, நேர்வழி பெற்ற அவர்களின் பிரதிநிதிகளோ (கலீஃபாக்கள்) மேற்கொள்ளவில்லை. அதுமட்டுமல்ல நபி ﷺ அவர்கள் இறந்து இரண்டாம் நூற்றாண்டு, மூன்றாம் நூற்றாண்டு வரை எவரும் இதனை மேற்கொள்ளவில்லை. மாறாக, இது புதிதாக உருவாக்கப்பட்ட பித்அத் செயலாகும்.

பயனுள்ள விசயம் – 2

அல்லாஹ்தான் நிர்வகிக்கின்றான்; ஐம்பூதங்கள் அல்ல

*

நட்சத்திரங்கள் மற்றும் அதன் வட்டப் பாதைகள் உள்ளிட்ட வற்றைக் குறித்துகொண்டிருக்கும் வழிகேட்டுக் கொள்கைகள் பின்வருமாறு:

நட்சத்திரங்கள், சூரியன், சந்திரன் ஆகியவற்றின் சுழற்சியினால் விண்வெளியில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் நிகழ்வுகளில் சிலவற்றின்மீது நட்சத்திர இயக்கங்களுக்கு ஆதிக்கம் செலுத்துதல் இருக்கின்றது என்றும், இந்தப் படைப்புகளை நிர்வகிப்பதிலும் அதன் செயல்பாடுகளை உபயோகப்படுத்துவதிலும் அதற்கு ஆதிக்கம் செலுத்துதல் இருக்கின்றது என்றும், இந்தப் படைப்பினங் களாகிய நட்சத்திரங்கள் உலகத்தினை அல்லாஹ்வின் அனுமதியுடன் இயக்குகின்றது என்றும், இந்த இயக்குதலானது அல்லாஹ்வின் அனுமதியுடன்தான் நடைபெறுகிறது என்று எண்ணி 'இந்த நட்சத்தி ரம் இவ்வாறு நிர்வகிக்கிறது' என்றும் கொள்கை கொண்டிருப்பது – இவை யாவும் அசத்தியமான, வழிகேடான இறைமறுப்புக் கொள்கையாகும்.

இவ்வாறு கொள்கைகொண்டிருப்பவர் கப்று வணங்கிகள் கொண்டிருக்கிற கொள்கை கொண்டவரைப் போன்றவர் ஆவார். ஏனெனில், கப்று வணங்கிகள் நல்லோர், பெரியோர் மற்றும் சிலைகள் வழிபடுவோர் ஆகியோர் அல்லாஹ் தனது படைப்புகளில் இவர்களுக்குச் சில அதிகாரங்களை வழங்கியுள்ளான், சில இறை நேசர்களுக்கு இவ்வுலகில் அதிகாரத்தை அளித்துள்ளான், அந்த இறைநேசர்கள் தனது அதிகாரத்தை நாடியோருக்கு பயன்படுத்து கிறார்கள், நாடியோருக்கு பயன்படுத்தாமல் தடுத்துக்கொள்கிறார்கள் என்று கருதுகிறார்கள். இவ்வாறு கருதுவதும் அசத்தியக் கொள்கை யும் அறியாமையும் வழிகேடும் இறைமறுப்பும் ஆகும். மாறாக,